








# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : ஸ்ரீ ப ரா வி

மலர் 1 இதழ் 52 31.12.2025




# ஸ்ரீமதே வராஹ மஹாதேசிகாய நம:

# உள்ளே....

## படித்து
## பின்பற்ற வேண்டிய
## முத்துக்கள்
## உபதேசங்கள்

# முத்துக்கள்

**1.** *விஷ்ணு தர்மம்* **(1-59) :** *ஸம்ஸாரக் கடலில் மூழ்கி விஷயங்களில் அகப்பட்ட மனதையுடையவர்களுக்கு விஷ்ணுவாகிய ஓடம் தவிர அடையவேண்டிய சிறந்த வஸ்து வேறொன்றில்லை.*

**********************************************************
************

**2.** *பாரதம்* **(***சாந்தி* **-350-36) :** *ப்ரஹ்மாவையும், சிவனையும், மற்ற தேவர்களையும் நல்ல அறிவுடையவர்கள்* **(***முமுக்ஷுக்கள்***)** *ஸேவிக்கிறதில்லை. ஏனெனில், அவர்கள் கொடுக்கும் பலன் அல்பமே.*

**********************************************************
**********************************************************

**3. एवमेव विजानीत नात्र कार्या विचारणा ।**
**हरिरेकः सदा ध्येयो भवद्भिः सत्त्वसंस्थितैः ।।**
**नान्यो जगति देवोऽस्ति विष्णोर्नारायणात्परः ।।**

*ஹரி.* **(2-132-8) :** *அந்தணர்களே! ஸத்துவகுணம் மேலிட்ட உங்களால் ஹரியொருவனே எப்போதும் த்யானிக்கத் தக்கவன்.* **(***இது சிவன் வசனம்***)**

**********************************************************
**********************************************************

**4.** *ஏழு ஜந்மங்களில் ஸூர்யனிடம் பக்தி பண்ணும் மனிதன் ஸூர்ய னுடைய அருளால் ருத்ரபக்தனாகிறான். ருத்ரனிடம் ஏழு ஜந்மங்களில் பக்திபண்ணுபவன் ருத்ரனின் அநுக்ரஹத்தால் விஷ்ணு பக்தனாகப் பிறக்கிறான். வாஸுதேவனிடம் ஏழு ஜந்மங்கள் பக்தி பண்ணுமவன் வாஸுதேவனுடைய அநுக்ரஹத்தால் அவனிடமே போய்ச் சேருகிறான்.*

**********************************************************
**********************************************************

**5.***புருஷோத்தமனான எம்பெருமானை மற்ற தெய்வங்களுடன் ஸமமாக எண்ணுமவர்கள் பாஷண்டிகள் என்று அறியவேண்டியது. அவர்கள் எல்லாக் கர்மங்களிலிருந்தும் விலக்கப்பட்டவர்கள்.*

**********************************************************
**********************************************************

**6. व्यक्तं मृत्युमुखं विद्यादव्यक्तममृतं पदम् ।**
**निवृत्तिलक्षणं धर्मं ऋषिर्नारायणोऽब्रवीत् ।।**

பார. (சாந்தி - 219-2) : நிவ்ருத்தி தர்மங்களை நாராயணன் என்ற ருஷி சொன்னார். (ஒரு பயனை வேண்டிச் செய்யும் கர்மங்களுக்கு ப்ரவ்ருத்தி தர்மங்களென்றும் மோக்ஷத்தையே விரும்பிச் செய்யும் கர்மங்களுக்கு நிவ்ருத்தி தர்மங்களென்றும் பெயர்.)

**************************************************************

**************************************************************

## 7.अग्निहोत्रफला वेदाः शीलवृत्तफलं श्रुतम् ।
## रतिपुत्रफला दारा दत्तभुक्तफलं धनम् ।।

பார். (ஸ்பா -5 - 117) : சாஸ்த்ரத்தைக் கேட்பதாலுண்டாகும் ஜ்ஞாநத்துக்குப் பலன் ஆத்ம குணங்களும் நல்லொழுக்கமும்.

**************************************************************

**************************************************************

8. இதி. ஸமு (12-37): மனதை அடக்குவதற்காகவே ஸர்வ சாஸ்த்ரங்களும் புத்திமான்களால் சொல்லப்பட்டன. ஆகையால் எவன் மனது அடங்கியிருக்கிறதோ அவன் எல்லாச் சாஸ்த்ரங்களையும் அறிந்தவன்.

**************************************************************

**************************************************************

9. நாயின் வால் மறைக்கவேண்டுமிடத்தை மறைக்கிறதில்லை; ஈயையும் கொசுக்களையும் ஓட்டுகிறதில்லை. அதுபோல தர்மாநுஷ்டான மில்லாத நல்ல அறிவும் ப்ரயோஜநமற்றது.

**************************************************************

**************************************************************

10. சாண். ஸ்ம். (1-95) : பகவானை ஆச்ரயித்தவர்களுக்குப் பலஸித்தி உண்டாகிறதோ இல்லையோவென்று ஸம்சயமுண்டாகலாம். பகவத் பக்தர்களின் சுச்ரூஷையில் ஆசையுள்ளவர்கள் பலன் பெறுவதில் ஸம்சயமில்லை. (கருத்து: எம்பெருமானை ஆச்ரயிப்பவனிடத்தில் அவனுக்கு உண்டாகும் அநுக்ரஹத்தைவிட பகவத் பக்தர்களையாச்ரயித்தவனிடத்தில் அவன் அநுக்ரஹம் அதிகம்.)

**************************************************************

**************************************************************

11. கைமுதிக ந்யாயம் - தகுதியற்றவனுக்கே கிடைக்கும் பொழுது முழுத்தகுதியும் உடையவனுக்குக் கிடைக்காமல் போகுமா? என்பது, உதாஹரணம் : தன் அடியார்களை ஆச்ரயித்தவர்களைக் காக்கும் எம்பெரு மான், ஆசார்யனை ஆச்ரயித்தவர்களைக் காக்காமல் இருப்பானா?

**************************************************************

**************************************************************

*12. ந்யாஸ திலகம்* **(21)** : *ரங்கநாதனே! குருடன் கண் உள்ளவனைப் பிடித்துக்கொண்டு அவன் உதவியால் நடந்து செல்லுகிறான். நொண்டி, ஓடத்துக்குள் வைக்கப்பட்டு ஓடக்காரனால் கொண்டு போகப்படுகிறான். ராஜஸேவகனின் புதல்வன் முதலியவர்கள் அரசனையறியாதபோதிலும் எல்லாப் போகங்களையும் அநுபவிக்கிறார்கள். அப்படியே கருணையுள்ள ஆசார்யன், நான் உன்னையடையும்படி செய்கிறான்.*

*************************************************************

*************************************************************

*13. சாண். ஸ்ம்.***(1-15) :** *மிருகம், மனிதன், பறவை, முதலானவர்கள் வைஷ்ணவனை ஆச்ரயித்து அதனாலேயே பரமபதத்தை அடைகிறார்கள்.*

*************************************************************

*************************************************************

*14.ராமா.***(3-1-20)** : (*ராமனே!*) *உன் தேசத்திலிருக்கும் நாங்கள் உன்னால் ரக்ஷிக்கத் தகுந்தவர்கள். காட்டிலோ, நாட்டிலோ எங்கிருந்தாலும் நீதான் எங்களுக்கு அரசன்.* (*இது ரிஷிகள் வசநம்*).

*************************************************************

*************************************************************

15. *ஸ்வாகதம் பகவந் அத்ய மாம் தாரயிதும் ஆகத:*I

*தன்யோஸ்மி அனுக்ருஹீதோஸ்மி க்ருதார்தோஸ்மி க்ருபாநிதே*"

*இது அகங்களில் திருவாராதனம் செய்யும்போது நாம் சொல்லும் ஸ்லோகம்; நம் அகத்தில் இருக்கும் பெருமாளிடம் நாம் செய்யும் விண்ணப்பம் இது -* "*பெருமானே, கருணைக்கடலே, அடியேனை உய்ய வைப்பதற்காக இங்கு வந்து எழுந்தருளி உள்ளீர்; தேவரீருக்கு நல்வரவு; அடியேன் பாக்யம் செய்தவன்; அனுக்ரஹம் பெற்றவன் ஆகிறேன்*" *என்று அர்த்தம்.*

*************************************************************

*************************************************************

*16.பத்ரம் புஷ்பம் பலம் தோயம் யோ மே பக்த்யா ப்ரயச்சதி*|
*ததஹம் பக்த்யுபநதம் அச்நாமி ப்ரயதாத்மந:*II

"*இலையோ, பூவோ, பழமோ, நீரோ எதையானாலும் பக்தியுடன் கொடுத்தால் ஏற்பேன்; அதுவே எனக்குப் போதுமானது*" *என்பது அவன் சொன்ன அந்த வசனம்;*

*************************************************************

*************************************************************

*************************************************************